# Jer

## Chapter 4

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| תָּשׁ֔וּב | אֵלַ֖י | יְהוָ֛ה | נְאֻם־ | יִשְׂרָאֵ֧ל׀ | תָּשׁ֨וּב | אִם־ | 1 |
| திரும்புவாய் | என்னிடம் | யெகோவா | என்கிறார்- | இஸ்ரவேல் | திரும்பினால் | அல்லது- | |
| H7725 | H0413 | H3068 | H5002 | H3478 | H7725 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| תָנֽוּד׃ | וְלֹ֖א | מִפָּנַ֖י | שִׁקּוּצֶ֛יךָ | תָּסִ֧יר | וְאִם־ |
| அலைவாய் | இல்லை | என்-முகத்திலிருந்து | உன்-அருவருப்புகளை | நீக்கினால் | அல்லது- |
| H5110 | H3808 | H6440 | H8251 | H5493 | |

> இஸ்ரவேல், நீ திரும்புகிறதற்கு மனமிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று யெகோவா சொல்லுகிறார்; நீ உன் அருவருப்புகளை என் பார்வையிலிருந்து அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| וּבִצְדָקָ֑ה | בְּמִשְׁפָּ֖ט | בֶּאֱמֶ֔ת | יְהוָ֔ה | חַי־ | וְנִשְׁבַּ֙עְתָּ֙ | 2 |
| நீதியிலும் | நியாயத்திலும் | உண்மையிலும் | யெகோவா | ஜீவனுள்ள- | ஆணையிட்டால் | |
| H6666 | H4941 | H0571 | H3068 | | H7650 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ס | יִתְהַלָּֽלוּ׃ | וּב֥וֹ | גוֹיִ֖ם | ב֛וֹ | וְהִתְבָּ֧רְכוּ |
| — | மேன்மைபாராட்டுவார்கள் | அவரில் | ஜாதிகள் | அவரில் | ஆசீர்வதிப்பார்கள் |
| | | | | | H1288 |

> நீ உண்மையுடனும், நியாயத்தோடும், நீதியுடனும், யெகோவாவுடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுவாய்; அந்நியமக்களும் அவருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருக்குள் மேன்மைபாராட்டுவார்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| וְלִירוּשָׁלִַ֗ם | יְהוּדָה֙ | לְאִ֤ישׁ | יְהוָ֜ה | אָמַ֣ר | כֹ֣ה | כִּי־ | 3 |
| எருசலேமுக்கும் | யூதாவின் | மனிதனுக்கு | யெகோவா | சொன்னார் | இவ்வாறு | ஏனெனில்- | |
| H3389 | H3063 | H0376 | H3068 | H0559 | H3541 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| קוֹצִֽים׃ | אֶל־ | תִּזְרְע֖וּ | וְאַֽל־ | נִ֑יר | לָכֶ֖ם | נִ֥ירוּ |
| முட்களில் | -நோக்கி | விதையுங்கள் | வேண்டாம்- | நிலத்தை | உங்களுக்கு | உழுங்கள் |
| H6975 | H0413 | H2232 | H0408 | H5215 | | H5214 |

> யூதா மக்களுடனும், எருசலேம் மக்களுடனும் யெகோவா சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முட்களுக்குள்ளே விதைக்காதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| עָרְל֣וֹת | וְהָסִ֙רוּ֙ | לַֽיהוָ֗ה | הִמֹּ֣לוּ | 4 |
| விருத்தசேதனமின்மையை | நீக்குங்கள் | யெகோவாவுக்கு | விருத்தசேதனம்-செய்யுங்கள் | |
| H6190 | H5493 | H3068 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| פֶּן־ | יְרוּשָׁלִָ֑ם | וְיֹשְׁבֵ֖י | יְהוּדָ֔ה | אִ֣ישׁ | לְבַבְכֶ֔ם |
| இல்லையேல்- | எருசலேமின் | குடிகளே | யூதாவின் | மனிதனே | உங்கள்-இருதயத்தின் |
| H6435 | H3389 | H3427 | H3063 | H0376 | H3824 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| מִפְּנֵ֖י | מְכַבֶּ֑ה | וְאֵ֣ין | וּבָעֲרָה֙ | חֲמָתִ֗י | כָאֵ֜שׁ | תֵּצֵ֨א |
| காரணமாக | அணைப்பவன் | இல்லை | எரியும் | என்-கோபம் | நெருப்பைப்-போல | புறப்படும் |
| H6440 | H3518 | H0369 | | H2534 | H0784 | H3318 |

| | |
|---|---|
| מַעַלְלֵיכֶֽם׃ | רֹ֖עַ |
| உங்கள்-செயல்களின் | தீமையின் |
| H4611 | H7455 |

> யூதா மனிதர்களே, எருசலேமின் குடிமக்களே, உங்கள் செயல்களுடைய பொல்லாப்பினால் என் கடுங்கோபம் நெருப்பைப்போல எழும்பி, அணைப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் யெகோவாவாக்கென்று உங்களை. முற்றிலுமாய் அர்ப்பணியுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְאִמְר֗וּ | הַשְׁמִ֫יעוּ | וּבִירוּשָׁלִַ֜ם | בִּיהוּדָ֡ה | הַגִּ֣ידוּ | 5 |
| சொல்லுங்கள் | கேட்கப்பண்ணுங்கள் | எருசலேமிலும் | யூதாவில் | அறிவியுங்கள் | |
| H0559 | H8085 | H3389 | H3063 | H5046 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| מַלְא֗וּ | קִרְא֣וּ | בָּאָ֖רֶץ | שׁוֹפָ֛ר | )תִּקְע֥וּ( | ]ותקעו[ |
| நிரப்புங்கள் | கூப்பிடுங்கள் | தேசத்தில் | எக்காளத்தை | (ஊதுங்கள்) | [ஊதுங்கள்] |
| H4390 | H7121 | H0776 | H7782 | H8628 | H8628 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| הַמִּבְצָֽר׃ | עָרֵ֥י | אֶל־ | וְנָב֖וֹאָה | הֵאָסְפ֥וּ | וְאִמְר֗וּ |
| அரணான | நகரங்களுக்கு | -நோக்கி | போவோம் | கூடிவாருங்கள் | சொல்லுங்கள் |
| H4013 | | H0413 | H0935 | H0622 | H0559 |

தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கச்செய்யுங்கள்; நாம் பாதுகாப்பான பட்டணங்களுக்கு வந்துசேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாகக் கூப்பிடுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אַל־ | הָעִ֖יזוּ | צִיּ֔וֹנָה | נֵס֙ | שְׂאוּ־ | 6 |
| வேண்டாம்- | அவசரப்படுங்கள் | சீயோனை-நோக்கி | கொடியை | உயர்த்துங்கள்- | |
| H0408 | H5756 | H6726 | H5251 | H5375 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| מִצָּפ֖וֹן | מֵבִ֥יא | אָנֹכִ֛י | רָעָ֗ה | כִּ֣י | תַּעֲמֹ֑דוּ |
| வடக்கிலிருந்து | கொண்டுவருகிறேன் | நான் | தீமையை | ஏனெனில் | நில்லுங்கள் |
| H6828 | H0935 | H0595 | | | H5975 |

| | |
|---|---|
| גָּדֽוֹל׃ | וְשֶׁ֥בֶר |
| பெரிய | அழிவையும் |
| | H7667 |

சீயோனுக்கு நேரே கொடியேற்றுங்கள்; கூடுங்கள்; நிற்காதிருங்கள்; நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகா அழிவையும் வரச்செய்கிறேன்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| נָסַ֔ע | גּוֹיִם֙ | וּמַשְׁחִ֤ית | מִֽסֻּבְּכ֔וֹ | אַרְיֵה֙ | עָלָ֤ה | 7 |
| புறப்பட்டான் | ஜாதிகளின் | அழிப்பவனும் | தன்-புதரிலிருந்து | சிங்கம் | எழுந்தான் | |
| H5265 | | H7843 | H5441 | | H5927 | |

| | | | | |
|---|---|---|---|---|
| לְשַׁמָּ֔ה | אַרְצֵךְ֙ | לָשׂ֤וּם | מִמְּקֹמ֑וֹ | יָצָ֣א |
| பாழாக | உன்-தேசத்தை | ஆக்குவதற்கு | தன்-இடத்திலிருந்து | வெளியேவந்தான் |
| H8047 | H0776 | | H4725 | H3318 |

| | | | |
|---|---|---|---|
| יוֹשֵֽׁב׃ | מֵאֵ֥ין | תִּצֶּ֖ינָה | עָרַ֥יִךְ |
| குடியிருப்பவன் | இல்லாமல் | இடிக்கப்படும் | உன்-நகரங்கள் |
| H3427 | H0369 | | |

உன் தேசத்தைப் பாழாக்கிவிடுவதற்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, தேசங்களை அழிக்கிறவன் தன் இடத்திலிருந்து புறப்பட்டுவருகிறான்; உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும் என்கிறார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| כִּ֥י | וְהֵילִ֑ילוּ | סִפְד֖וּ | שַׂקִּ֛ים | חִגְר֥וּ | זֹ֛את | עַל־ | 8 |
| ஏனெனில் | அலறுங்கள் | புலம்புங்கள் | இரட்டுகளை | உடுத்துங்கள் | இதின் | -மேல் | |
| | H3213 | H5594 | H8242 | H2296 | H2063 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| פ | מִמֶּֽנּוּ׃ | יְהוָ֖ה | אַף־ | חֲר֥וֹן | שָׁ֛ב | לֹא־ |
| — | நம்மிலிருந்து | யெகோவாவின் | கோபம்- | உக்கிரமான | திரும்பியது | இல்லை- |
| | | H3068 | H0639 | H2740 | H7725 | H3808 |

இதினிமித்தம் சணல் ஆடையை அணிந்துகொள்ளுங்கள்; புலம்பி அலறுங்கள்; யெகோவாவுடைய கடுங்கோபம் நம்மைவிட்டுத் திரும்பவில்லையே.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| הַמֶּלֶךְ | לֵב־ | יֹאבַד | יְהוָה | נְאֻם־ | הַהוּא | בַיּוֹם־ | וְהָיָה | 9 |
| ராஜாவின் | இருதயம்- | அழியும் | யெகோவா | என்கிறார்- | அந்த | நாளில்- | ஆகும் | |
| H4428 | | H0006 | H3068 | H5002 | H1931 | H3117 | H1961 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| יִתְמָהוּ׃ | וְהַנְּבִיאִים | הַכֹּהֲנִים | וְנָשַׁמּוּ | הַשָּׂרִים | וְלֵב |
| வியப்பார்கள் | தீர்க்கதரிசிகளும் | ஆசாரியர்களும் | திகைப்பார்கள் | பிரபுக்களின் | இருதயமும் |
| H8539 | H5030 | H3548 | H8074 | H8269 | |

> அந்நாளில் ராஜாவின் இருதயமும், பிரபுக்களின் இருதயமும் சோர்ந்துபோகும்; ஆசாரியர்கள் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள் என்று யெகோவா சொல்லுகிறார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הִשֵּׁאתָ | הִשֵּׁא | אָכֵן | יְהוִה | אֲדֹנָי | אֲהָהּ | וָאֹמַר | 10 |
| ஏமாற்றினீர் | ஏமாற்றி | மெய்யாக | யெகோவா | ஆண்டவராகிய | ஐயோ | சொன்னேன் | |
| H5377 | H5377 | H0403 | H3069 | H0136 | H0162 | H0559 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| לָכֶם | יִהְיֶה | שָׁלוֹם | לֵאמֹר | וְלִירוּשָׁלַםִ | הַזֶּה | לָעָם |
| உங்களுக்கு | இருக்கும் | சமாதானம் | என்று-கூறுவது | எருசலேமையும் | இந்த | ஜனத்தை- |
| | H1961 | H7965 | H0559 | H3389 | H2088 | |

| | | | |
|---|---|---|---|
| הַנָּפֶשׁ׃ | עַד־ | חֶרֶב | וְנָגְעָה |
| ஆத்துமாவின் | வரை- | பட்டயம் | தொட்டது |
| H5315 | H5704 | H2719 | H5060 |

> அப்பொழுது நான்: ஆ! யெகோவாவாகிய ஆண்டவரே, உங்களுக்குச் சமாதானமிருக்கும் என்று சொன்னதினால், உண்மையாகவே இந்த மக்களுக்கும் எருசலேமுக்கும் மிகுதியான மோசத்தை வரச்செய்தீர்; பட்டயம் ஜீவன்வரை எட்டுகிறதே என்றேன்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| רוּחַ | וְלִירוּשָׁלַםִ | הַזֶּה | לָעָם־ | יֵאָמֵר | הַהִיא | בָּעֵת | 11 |
| காற்று | எருசலேமுக்கும் | இந்த | ஜனத்திற்கு- | சொல்லப்படும் | அந்த | காலத்தில் | |
| H7307 | H3389 | H2088 | | H0559 | H1931 | H6256 | |

| | | | | |
|---|---|---|---|---|
| בַּת־ | דֶּרֶךְ | בַּמִּדְבָּר | שְׁפָיִם | צַח |
| மகளின்- | வழியில் | வனாந்தரத்தில் | மொட்டை-மேடுகளின் | வெட்டவெளியின் |
| H1323 | H1870 | | H8205 | H6703 |

| | | | | |
|---|---|---|---|---|
| לְהָבַר׃ | וְלוֹא | לִזְרוֹת | לוֹא | עַמִּי |
| சுத்தம்-செய்வதற்கு | இல்லை | புடைப்பதற்கு | இல்லை | என்-ஜனத்தின் |
| H1305 | H3808 | H2219 | H3808 | |

> வனாந்திரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து, ஒரு தீக்காற்று என் மக்களாகிய மகளுக்கு நேராக வீசும் என்று அக்காலத்தில் இந்த மக்களுடனும் எருசலேமுடனும் சொல்லப்படும்; அது தூற்றவுமாட்டாது சுத்திகரிக்கவுமாட்டாது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| אֲדַבֵּר | אֲנִי | גַּם־ | עַתָּה | לִי | יָבוֹא | מֵאֵלֶּה | מָלֵא | רוּחַ | 12 |
| பேசுவேன் | நான் | கூட- | இப்போது | எனக்கு | வரும் | இவைகளைவிட | நிறைந்த | காற்று | |
| H1696 | H0589 | H1571 | H6258 | | H0935 | H0428 | H4392 | H7307 | |

| | |
|---|---|
| אוֹתָם׃ | מִשְׁפָּטִים |
| அவர்களுக்கு | நியாயத்தீர்ப்புகளை |
| H0853 | H4941 |

> இதைப்பார்க்கிலும் பலமான காற்று என் காரியமாய் வரும்; இப்பொழுது நானும் அவர்களுடன் நியாயம் பேசுவேன்.

13
הִנֵּ֣ה ׀ இதோ H2009
כַּעֲנָנִ֣ים மேகங்களைப்-போல H6051
יַעֲלֶ֗ה ஏறிவருவான் H5927
וְכַסּוּפָה֙ சுழல்காற்றைப்-போலவும்
מַרְכְּבוֹתָ֔יו அவன்-இரதங்கள் H4818
קַלּ֧וּ விரைவானவை H7043
מִנְּשָׁרִ֛ים கழுகுகளைவிட H5404
סוּסָ֑יו அவன்-குதிரைகள்
א֥וֹי ஐயோ H0188
לָ֖נוּ நமக்கு
כִּ֥י ஏனெனில்
שֻׁדָּֽדְנוּ׃ அழிக்கப்பட்டோம் H7703

> இதோ, மேகங்களைப்போல எழும்பிவருகிறான்; அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப்போல் இருக்கிறது; அவனுடைய குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்; நமக்கு ஐயோ, நாம் பாழாக்கப்படுகிறோமே.

14
כַּבְּסִ֨י கழுவு H3526
מֵרָעָ֤ה தீமையிலிருந்து
לִבֵּךְ֙ உன்-இருதயத்தை
יְר֣וּשָׁלִַ֔ם எருசலேமே H3389
לְמַ֖עַן அதனால் H4616
תִּוָּשֵׁ֑עִי இரட்சிக்கப்படுவாய் H3467
עַד־ வரை- H5704
מָתַ֛י எப்போது H4970
תָּלִ֥ין தங்கும்
בְּקִרְבֵּ֖ךְ உன்-உள்ளத்தில் H7130
מַחְשְׁב֥וֹת நினைவுகள் H4284
אוֹנֵֽךְ׃ உன்-அக்கிரமத்தின் H0205

> எருசலேமே, நீ காப்பாற்றப்படுவதற்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பு நீங்கக் கழுவு; எதுவரை அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் தங்கும்.

15
כִּ֛י ஏனெனில்
ק֥וֹל குரல்
מַגִּ֖יד அறிவிக்கிறது H5046
מִדָּ֑ן தாணிலிருந்து H1835
וּמַשְׁמִ֥יעַ கேட்கப்பண்ணுகிறது H8085
אָ֖וֶן தீங்கை H0205
מֵהַ֥ר மலையிலிருந்து H2022
אֶפְרָֽיִם׃ எப்பிராயீமின் H0669

> தாண் பட்டணத்திலிருந்து ஒரு சத்தம் வந்து, செய்தியை அறிவிக்கிறது; எப்பிராயீமின் மலையிலிருந்து வந்து, தீங்கைப் பிரசித்தம்செய்கிறது.

16
הַזְכִּ֣ירוּ நினைப்பூட்டுங்கள் H2142
לַגּוֹיִ֗ם ஜாதிகளுக்கு
הִנֵּה֙ இதோ H2009
הַשְׁמִ֣יעוּ கேட்கப்பண்ணுங்கள் H8085
עַל־ -மேல்
יְר֣וּשָׁלִַ֔ם எருசலேமின் H3389
נֹצְרִ֥ים காவலர்கள் H5341
בָּאִ֖ים வருகிறார்கள் H0935
מֵאֶ֣רֶץ தேசத்திலிருந்து H0776
הַמֶּרְחָ֑ק தூரமான H4801
וַֽיִּתְּנ֛וּ எழுப்புகிறார்கள் H5414
עַל־ -மேல்
עָרֵ֥י நகரங்களின்
יְהוּדָ֖ה யூதாவின் H3063
קוֹלָֽם׃ குரலை

> தேசங்களுக்கு அதை நீங்கள் பிரபலப்படுத்துங்கள்; இதோ, காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்த சத்தமிடுவார்கள் என்று எருசலேமுக்குக் கூறுங்கள்.

17
כְּשֹׁמְרֵ֣י வயல்-காவலர்களைப்-போல H8104
שָׂדַ֔י நிலத்தின்
הָי֥וּ இருந்தார்கள் H1961
עָלֶ֖יהָ அவள்-மேல்
מִסָּבִ֑יב சுற்றிலும் H5439
כִּי־ ஏனெனில்-
אֹתִ֥י என்னை H0853
מָרָ֖תָה கலகம்-செய்தாள் H4784
נְאֻם־ என்கிறார்- H5002
יְהוָֽה׃ யெகோவா H3068

> அதற்கு விரோதமாய் அவர்கள் வயல்வெளிகளின் காவற்காரரைப்போலச் சுற்றிலுமிருப்பார்கள்; அது எனக்கு விரோதமாய்க் கலகம் செய்தது என்று யெகோவா சொல்லுகிறார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| רָעָתֵךְ | זֹאת | לָךְ | אֵלֶּה | עָשׂוֹ | וּמַעֲלָלַיִךְ | דַּרְכֵּךְ | 18 |
| உன்-தீமை | இது | உனக்கு | இவைகளை | செய்தன | உன்-செயல்களும் | உன்-வழியும் | |
| | H2063 | | H0428 | | H4611 | H1870 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ס | לִבֵּךְ׃ | עַד־ | נָגַע | כִּי | מָר | כִּי |
| — | உன்-இருதயத்தின் | வரை- | தொட்டது | ஏனெனில் | கசப்பானது | ஏனெனில் |
| | | H5704 | H5060 | | H4751 | |

> உன் நடக்கையும் உன் செயல்களுமே இவைகளை உனக்கு சம்பவிக்கச்செய்தன; இது இத்தனை கசப்பாயிருந்து, உன் இருதயம்வரை எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| קִירוֹת | )אוֹחִילָה( | ]אחולה[ | מֵעַי | מֵעַי | 19 |
| சுவர்கள் | (வலிக்கிறேன்) | [வலிக்கிறேன்] | என்-குடல்களே | என்-குடல்களே | |
| H7023 | H3176 | | H4578 | H4578 | |

| | | | | |
|---|---|---|---|---|
| לֹא | לִבִּי | לִי | הֹמֶה־ | לִבִּי |
| இல்லை | என்-இருதயம் | எனக்கு | கொந்தளிக்கிறது- | என்-இருதயத்தின் |
| H3808 | | | H1993 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| )שָׁמַעַתְּ( | ]שמעתי[ | שׁוֹפָר | קוֹל | כִּי | אַחֲרִישׁ |
| (கேட்டாய்) | [கேட்டேன்] | எக்காளத்தின் | குரலை | ஏனெனில் | அமைதியாயிருப்பேன் |
| H8085 | H8085 | H7782 | | | |

| | | |
|---|---|---|
| מִלְחָמָה׃ | תְּרוּעַת | נַפְשִׁי |
| யுத்தத்தின் | ஆர்ப்பரிப்பை | என்-ஆத்துமா |
| H4421 | H8643 | H5315 |

> என் குடல்கள், என் குடல்களே வலிக்கிறது; என் உள்ளம் வேதனைப்படுகிறது, என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமைதலாக இருக்கமுடியாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், போரின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| כָּל־ | שֻׁדְּדָה | כִּי | נִקְרָא | שֶׁבֶר | עַל־ | שֶׁבֶר | 20 |
| எல்லா- | அழிக்கப்பட்டது | ஏனெனில் | அழைக்கப்படுகிறது | அழிவு | -மேல் | அழிவின்-மேல் | |
| H3605 | H7703 | | H7121 | H7667 | | H7667 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| יְרִיעֹתָי׃ | רֶגַע | אֹהָלַי | שֻׁדְּדוּ | פִּתְאֹם | הָאָרֶץ |
| என்-திரைச்சீலைகள் | கணநேரத்தில் | என்-கூடாரங்கள் | அழிக்கப்பட்டன | திடீரென | தேசமும் |
| H3407 | H7281 | H0168 | H7703 | H6597 | H0776 |

> நாசத்திற்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; திடீரென்று என் கூடாரங்களும், ஒரு நிமிடத்தில் என் திரைகளும் பாழாக்கப்படுகிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ס | שׁוֹפָר׃ | קוֹל | אֶשְׁמְעָה | נֵס | אֶרְאֶה־ | מָתַי | עַד־ | 21 |
| — | எக்காளத்தின் | குரலை | கேட்பேன் | கொடியை | காண்பேன்- | எப்போது | வரை- | |
| | H7782 | | H8085 | H5251 | H7200 | H4970 | H5704 | |

> நான் எதுவரைக்கும் யுத்தத்தின் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| בָּנִים | יָדָעוּ | לֹא | אוֹתִי | עַמִּי | אֱוִיל | כִּי | 22 |
| பிள்ளைகள் | அறிந்தார்கள் | இல்லை | என்னை | என்-ஜனம் | மூடர் | ஏனெனில் | |
| | H3045 | H3808 | H0853 | | H0191 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| חֲכָמִים | הֵמָּה | נְבוֹנִים | וְלֹא | הֵמָּה | סְכָלִים |
| ஞானமுள்ளவர்கள் | அவர்கள் | விவேகமுள்ளவர்கள் | இல்லை | அவர்கள் | புத்தியற்றவர்கள் |
| H2450 | H1992 | H0995 | H3808 | H1992 | H5530 |

| | | | | |
|---|---|---|---|---|
| יָדָעוּ׃ | לֹא | וּלְהֵיטִיב | לְהָרַע | הֵמָּה |
| அறிந்தார்கள் | இல்லை | நன்மை-செய்ய | தீமை-செய்ய | அவர்கள் |
| H3045 | H3808 | H3190 | | H1992 |

> என் மக்களோ அறிவில்லாதவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச்செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மைசெய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| הַשָּׁמַיִם | וְאֶל־ | וָבֹהוּ | תֹהוּ | וְהִנֵּה־ | הָאָרֶץ | אֶת־ | רָאִיתִי | 23 |
| வானங்களை | -நோக்கி | பாழும் | வெறுமையும் | இதோ- | தேசத்தை | - | பார்த்தேன் | |
| H8064 | H0413 | H0922 | H8414 | H2009 | H0776 | H0853 | H7200 | |
| | | | | | | | | |
| | | | | | אוֹרָם׃ | | וְאֵין | |
| | | | | | அவைகளின்-ஒளி | | இல்லை | |
| | | | | | H0216 | | H0369 | |

> பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கற்றதும் வெறுமையுமாயிருந்தது; வானங்ளையும் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הִתְקַלְקָלוּ׃ | הַגְּבָעוֹת | וְכָל־ | רֹעֲשִׁים | וְהִנֵּה | הֶהָרִים | רָאִיתִי | 24 |
| அசைந்தன | குன்றுகளும் | எல்லா- | நடுங்குகின்றன | இதோ | மலைகளை | பார்த்தேன் | |
| H7043 | H1389 | H3605 | H7493 | H2009 | H2022 | H7200 | |

> மலைகளைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הַשָּׁמַיִם | עוֹף | וְכָל־ | הָאָדָם | אֵין | וְהִנֵּה | רָאִיתִי | 25 |
| வானங்களின் | பறவையும் | எல்லா- | மனிதன் | இல்லை | இதோ | பார்த்தேன் | |
| H8064 | H5775 | H3605 | H0120 | H0369 | H2009 | H7200 | |
| | | | | | | | |
| | | | | | | נָדָדוּ׃ | |
| | | | | | | பறந்துபோயின | |
| | | | | | | H5074 | |

> பின்னும் நான் பார்க்கும்போது, மனிதனில்லை; ஆகாயத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| עָרָיו | וְכָל־ | הַמִּדְבָּר | הַכַּרְמֶל | וְהִנֵּה | רָאִיתִי | 26 |
| அதின்-நகரங்களும் | எல்லா- | வனாந்தரமாயிற்று | கர்மேல் | இதோ | பார்த்தேன் | |
| | H3605 | | H3759 | H2009 | H7200 | |
| | | | | | | |
| אַפּוֹ׃ | חֲרוֹן | מִפְּנֵי | יְהוָה | מִפְּנֵי | נִתְּצוּ | |
| அவர்-கோபத்தின் | உக்கிரமான | காரணமாக | யெகோவாவின் | காரணமாக | இடிக்கப்பட்டன | |
| H0639 | H2740 | H6440 | H3068 | H6440 | H5422 | |
| | | | | | ס | |

> மேலும் நான் பார்க்கும்போது, யெகோவாவாலும், அவருடைய கடுங்கோபத்தாலும் பயிர்நிலம் வனாந்திரமானது; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோனது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| הָאָרֶץ | כָּל־ | תִּהְיֶה | שְׁמָמָה | יְהוָה | אָמַר | כֹה | כִּי־ | 27 |
| தேசமும் | எல்லா- | இருக்கும் | பாழாக | யெகோவா | சொன்னார் | இவ்வாறு | ஏனெனில்- | |
| H0776 | H3605 | H1961 | | H3068 | H0559 | H3541 | | |
| | | | | | | | | |
| | | | | | אֶעֱשֶׂה׃ | לֹא | וְכָלָה | |
| | | | | | செய்வேன் | இல்லை | முடிவு | |
| | | | | | | H3808 | H3617 | |

> தேசமெல்லாம் பாழாய்ப்போகும்; ஆகிலும் முற்றிலும் அழிக்கமாட்டேன் என்று யெகோவா சொல்லுகிறார்.

28
עַ֗ל־ -மேல்
זֹאת֙ இதின் H2063
תֶּאֱבַ֣ל துக்கிக்கும் H0056
הָאָ֔רֶץ தேசம் H0776
וְקָדְר֥וּ இருண்டுபோகும் H6937
הַשָּׁמַ֖יִם வானங்கள் H8064
מִמָּ֑עַל மேலிருந்து H4605
עַ֗ל ஏனெனில்

כִּֽי־ ஏனெனில்-
דִבַּ֙רְתִּי֙ பேசினேன் H1696
זַמֹּ֔תִי தீர்மானித்தேன் H2161
וְלֹ֥א இல்லை H3808
נִחַ֖מְתִּי மனம்மாறினேன் H5162
וְלֹא־ இல்லை- H3808

אָשׁ֥וּב திரும்புவேன் H7725
מִמֶּֽנָּה׃ அதிலிருந்து

> இதினிமித்தம் பூமி புலம்பும், உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போகும்; நான் அதைச் சொன்னேன், அதைத் தீர்மானம்செய்தேன்; நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை.

29
מִקּ֞וֹל குரலால்
פָּרָ֣שׁ குதிரைவீரனின்
וְרֹ֣מֵה வில்-எய்பவனின்
קֶ֗שֶׁת வில்லின் H7198
בֹּרַ֙חַת֙ ஓடுகிறது H1272
כָּל־ எல்லா- H3605
הָעִ֔יר நகரமும்

בָּ֚אוּ போனார்கள் H0935
בֶּעָבִ֔ים மேகங்களில் H5645
וּבַכֵּפִ֖ים பாறைகளிலும் H3710
עָל֑וּ ஏறினார்கள் H5927
כָּל־ எல்லா- H3605
הָעִ֣יר நகரமும்
עֲזוּבָ֔ה விடப்பட்டது

וְאֵין־ இல்லை- H0369
יוֹשֵׁ֥ב குடியிருப்பவன் H3427
בָּהֵ֖ן அவைகளில் H2004
אִֽישׁ׃ மனிதன் H0376

> குதிரைவீரரும் வில்வீரரும் இடும் சத்தத்தினால் எல்லா ஊராரும் ஓடி, அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் ஏறுவார்கள்; ஒரு மனிதனும் அவைகளில் குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்.

30
]ואתי[ [நீயோ]
)וְאַ֣תְּ( (நீயோ) H0859
שָׁד֞וּד அழிக்கப்பட்டவளே H7703
מַֽה־ என்ன- H4100
תַּעֲשִׂ֗י செய்வாய்
כִּֽי־ ஏனெனில்-
תִלְבְּשִׁ֨י உடுப்பாய் H3847
שָׁנִ֜י சிவப்பு H8144

כִּֽי־ ஏனெனில்-
תַעְדִּ֣י அணிவாய்
עֲדִי־ நகை- H5716
זָהָ֗ב தங்கத்தின் H2091
כִּֽי־ ஏனெனில்-
תִקְרְעִ֤י கிழிப்பாய் H7167
בַפּוּךְ֙ மையால் H6320

עֵינַ֔יִךְ உன்-கண்களை
לַשָּׁ֖וְא வீணாக H7723
תִּתְיַפִּ֑י அழகுபடுத்துவாய் H3302
מָאֲסוּ־ வெறுத்தார்கள்-
בָ֥ךְ உன்னை
עֹגְבִ֖ים காதலர்கள் H5689

נַפְשֵׁ֥ךְ உன்-உயிரை H5315
יְבַקֵּֽשׁוּ׃ தேடுவார்கள் H1245

> பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் அணிந்தாலும், பொன் ஆபரணங்களால் உன்னை அலங்கரித்தாலும், உன் கண்களில் மையிட்டுக்கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய்; ஆசைநாயகர்கள் உன்னை அசட்டைசெய்து, உன் உயிரை வாங்கத் தேடுவார்கள்.

31

| כִּ֣י | ק֔וֹל | כְּחוֹלָ֗ה | שָׁמַ֗עְתִּי | צָרָה֙ |
|---|---|---|---|---|
| ஏனெனில் | குரலை | பிரசவிப்பவளைப்-போல | கேட்டேன் | வேதனையை |
| | | | H8085 | |

| כְּמַבְכִּירָ֔ה | ק֧וֹל | בַּת־ | צִיּ֛וֹן | תִּתְיַפֵּ֖חַ | תְּפָרֵ֣שׂ |
|---|---|---|---|---|---|
| முதல்-பிரசவத்தைப்-போல | குரலை | மகளின்- | சீயோனின் | மூச்சிரைக்கிறாள் | விரிக்கிறாள் |
| H1069 | | H1323 | H6726 | H3306 | H6566 |

| כַּפֶּ֑יהָ | אֽוֹי־ | נָ֛א | לִ֥י | כִּֽי־ | עָֽיְפָ֥ה |
|---|---|---|---|---|---|
| தன்-கைகளை | ஐயோ- | கெஞ்சுகிறேன் | எனக்கு | ஏனெனில்- | சோர்ந்துபோனது |
| H3709 | H0188 | H4994 | | | H5888 |

| נַפְשִׁ֖י | לְהֹרְגִֽים׃ | פ |
|---|---|---|
| என்-ஆத்துமா | கொலையாளிகளுக்கு-முன் | — |
| H5315 | H2026 | |

> கர்ப்பவேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல்முறை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், மகளாகிய சீயோனின் சத்தத்தைக் கேட்கிறேன்; அவள் பெருமூச்சுவிட்டு, தன் கைகளை விரித்து: ஐயோ, கொலைபாதகர்களால் என் ஆத்துமா சோர்ந்துபோகிறதே என்கிறாள்.